ISSN:2582-9599

# புறநானூற்றில் காணப்படும் அதியமானின் சிறப்பம்சங்கள்

**தி. அமர்ராஜ்**

**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை**

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.**

**மின்னஞ்சல்: amarrajthirumavalavan94@gmail.com**

**முன்னுரை**

பண்டையத் தமிழ் நாகரிகம் மொழிச் சிறப்பு முதலானவற்றை அறிய விரும்புவோர்க்கு சான்றாதாரமாக செய்தி ஊற்றாக அமைவது சங்க இலக்கியம். சங்க இலக்கியத்தின் எந்த நூலைப் பிரித்து பார்த்தாலும் சிறந்த சிந்தனைகள் மிளிர்வதையும் ஓங்கி வளர்ந்த நாகரிகத்தைப் பிரதிபலிப்பதையும் காணலாம். எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் குறித்த முழுநூல்கள் இரண்டு அவை பதிற்றுப்பத்து புறநானூறு ஆகும். பதிற்றுப்பத்து சேர வேந்தரையே பாடுவது. புறநானூறு. தமிழகமெங்கும் இருந்த பெருவேந்தர், குறுநிலமன்னர், ஈகையஞ்செல்வர், சால்பமைந்த பெரியோர், புலவர் எனப் பலரையும் குறிப்பதாக அமைந்தது. புறநானூற்றில் சொல்லப்பட்டுள்ள மன்னர்களுள் ஒருவரான அதியமானைப் பற்றியும் அவரின் சிறப்பம்சங்களைப் பற்றியும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**புறநானூறு**

புறநானூறு என்னும் தொகைநூல் நானூறு பாடல்களைக் கொண்ட புறத்திணை சார்ந்த ஒரு சங்கத்தமிழ் நூல். புறம் புறப்பாட்டு என்றும் வழங்கப்படும். இது சங்க காலத் தமிழ் நூல் தொகுப்பான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று இந்நூலைத் தொகுத்தவர் பெயரும் தொகுப்பித்தவர் பெயரும் தெரியவில்லை. பாக்களின் அடிவரையறை 4 அடி முதல் 40 அடிவரை உள்ளன. புறநானூற்றின் பாடல்கள் சங்க காலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும், மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன. இதனை ஜி.யு.போப் அவர;கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அக்காலத் தமிழ் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, நாகரிகம், கலை வளர்ச்சி, வீரம், கொடை, ஆடை, அணிகலன், பழக்கவழக்கங்கள், வாணிபம் போன்ற செய்திகளைப் புறநானூறு வழி அறியலாம்.

**அதியமான் நெடுமான் அஞ்சி**

அதியமான் நெடுமான் அஞ்சி. தகடூரை அதியர் என்போர் சங்ககாலக் குடிமக்கள் இவர்களின் தலைமகனாக விளங்கியவர்களை அதியர் கோமகன் என்றனர். அதியமான் என்பது அதியர் கோமான் என்பதன் மரூஉ அஞ்சி என்பது இயற்பெயர். ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடு தலைநீர்நாடு எனப் பெயர் பெற்றிருந்தது. தலைநீர் என்பது ஓகேனக்கல் அருவியின் சங்ககாலப்பெயர். அக்காலத்து அதியமான்களுள் இவனைப் பற்றியே அதிக தகவல்கள் தெரியவருகின்றன. பல சங்கத் தமிழ் நூல்களில் இம்மன்னனைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, சிறுபாணாற்றுப்படை ஆகிய நூல்களில் நெடுமான் அஞ்சி பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. அஞ்சியின் வீரமும், கொடைச் சிறப்பும், ஒளவையார் முதலிய புலவர்களின் பாடல்களின் கருப்பொருட்களாக உள்ளன.

**அதியமானின் இரு பண்புகள்**

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும! எமக்கே; மற்று அதன்
துன் அருங் கடாஅம் போல
இன்னாய், பெரும! நின் ஒன்னா தேர்க்கே" (புறம் பா- 94)

யானையின் எளிமையும் வன்மையும் அதியமானின் பண்பிற்கு உவமையாயின யானை எளிமையாய் இருத்தல் அதியமானின் அருளுள்ளத்தையும் மதம் கொள்ளுதல் போர;க்களத்தே பகையரசரால் அணுக இயலாத பேராண்மையையும் உணர்த்தின. இருவேறு தன்மைகளும் ஒருங்கே பெற்றவன் அதியமான். என்று மன்னனின் பண்புகளை குறிக்கிறது.

**அதியமானின் ஆட்சி**

"எருதே இளைய நுகம் உணராவே;
சகடம் பண்டம் பெரிது பெய்தன்றே;
அவல் இழியினும் மிசை ஏறினும்
அவனது அறியுநர் யார்? என உமணர்
கீழ் மரத்து யாத்த சேம அச்சு அன்ன,
இசை விளங்கு கவிகை நெடியோய்! திங்கள்
நாள் நிறை மதியத்து அனையை; இருள்
யாவணதோ, நின் நிழல் வாழ்வோர்க்கே?" (புறம் பா- 102)

காளைகள் இளமையானவை நுகம் பூட்டி இழுத்தலை அறியா காளைகள் அவ்வண்டியில் உள்ள உப்பாகிய பண்டம் அதிகமானதால் கனத் தால் அவ்வண்டி பள்ளத்தில் சென்றாலும் மேட்டில் ஏறினாலும் அவ்விடத்தே வரும் இடையறை எண்ணி உப்பு வாணிகர் பாதுகாப்பிற்காக அச்சுமரத்தின் கண்ணே காவலாகிய சேம அச்சைச் சேர்த்துக் கட்டியிருப்பர். ஆச்சேமவச்சுப் போன்ற புகழ் விளங்கிய கொடையால் கவிழ்ந்த கையையுடையவன் எம்மன்னன் அதியமான். அதியமான் ஆகிய நீ திங்களாகிய நிறைந்த முழு நிலாவிற்கு ஒப்பானவன். உன்னுடைய நிழலில் வாழ்பவர்களுக்குத் துன்பமாகிய இருள் தீண்டாது என்று அதியமானின் இயல்பை ஔவையார் எழுதிய இப்பாடலின் மூலம் அறியலாம்.

**அதியமானின் ஈகை திறன்**

"ஒருதலைப் பதலை தூங்க ஒரு தலைத்
தூம்பு அகச் சிறு முழாத் தூங்கத் தூக்கி,
கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யார்? எனச்
சுரன்முதல் இருந்த சில்வளை விறலி!
அலத்தற் காலை ஆயினும்
புரத்தல் வல்லன்; வாழ்க அவன்தாளே!" (புறம் பா- 103)

அரசனுடைய புகழைப் பாடும் விறலியே! உணவு இல்லாமையால் கவிழ்த்து வைக்கப் பெற்ற கலத்தைத் திருப்பி வைத்து உணவு எவர் தருவர் என்று வறண்ட நிலத்தில் செல்பவரே கவலை வேண்டாம். போர;க்களத்தில் எழுந்த புகை மேல் கூடிய மேகம் போல, இளைய யானைகளைச்

சூழும் பகைவரிடத்தில் எனது மன்னனான அதியமான் உள்ளான். அவன் வேளை தவறாமல் கலம் நிறைந்திருக்க கொழுப்புடைய புலால் உணவை தருவான். வானம் வறண்ட காலத்திலும் அவன் கொடுத்தலைத் தவறமாட்டான் என்று ஈகையில் சிறந்தவன் அதியமான் என்று இப்பாடல் அடிகள் குறிக்கின்றன.

**அதியமானின் அருள்**

"யாழொடும் கொள்ளா; பொழுதொடும் புணரா;
பொருள் அறிவாரா; ஆயினும், தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை,
என்வாய்ச் சொல்லும் அன்ன - ஒன்னார்
கடிமதில் அரண்பல கடந்த
நெடுமான் அஞ்சி! நீ அருளன்மாறே" (புறம் பா; 92)

தம் புதல்வர் மழலைச் சொல்லிற்கு செவிமடுக்கும் தந்தையரைப் போலத் தன் சொற்களுக்கும் அதியமான் செவி மடுக்கின்றான் என்று ஔவையார் என்று உணர்த்தியுள்ளார். அதுபோன்று நீ அருள் செய்தலால் என் சொற்களும் சிறப்பு பெற்றது என்கிறார்.

**அதியமான் - ஔவையார் நட்பு**

"வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல் தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்!
போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக – பெரும! நீயே தொலைநிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீம்கனி குறியாது,
ஆதல் நின் அகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்குஈத் தனையே!" (புறம் பா – 91)

சிவபெருமானின் தோற்றமாக நீலமணி மிடற்று ஒருவன் உலகினை காப்பதற்காகவும் உலக நன்மைக்காகவும் கொடிய வி'த்தை உண்ட சிவப்பெருமானைப் போல் கிடைத்தற்கரிய வாழ்நாள் நீட்டிக் கும் அரிய நெல்லிக்கனியைத் தானுண்ணாமல் எனக்கு அளித்து நம் நட்பையும் புலவரால் மன்னன் நன்நெறியில் ஆட்சி செய்ய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தை வாழ்த்துவதாக இப்பாடல் அமைகிறது.

**அதியமானின் தேர்க்கால்**

"களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போர் எதிர்ந்து
எம்முளும் உளன் ஒரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்அன் னோனே" (புறம் பா- 87)

அதியமான் நாட்டில் வாழும் தச்சன் ஒருவன் மாதம் ஒன்றில் எட்டு தேர்கள் செய்ய வல்லவன். அப்படிப்பட்டவன் ஒரு மாதம் முயன்று வலிமையாகச் செய்த ஒரு தேர்க்காலைப் போல் மிக வலிமையுடையவன் என் மன்னன் அதியமான். ஆகையால் போர்க்களம் செல்வதை தவிருங்கள். உங்களை போரில் எதிரியிடம் ஆற்றலுடையவன் ஒருவன் இருக்கிறான்.

**அதியமான் மற்றும் படையினரின் வீரச்சிறப்பு**

“யாவிர் ஆயினும் கூழை தார்கொண்டு
யாம்பொருதும் என்றல் ஓம்புமின் - ஓங்குதறல்
ஒளிறு இலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்
கதிர்விடு நுண்பூண் அம்பகட்டு மார்பின்
விழவுமேம் பட்ட நல்லோர்
முழவுத்தோள் என்ஐயைக் காணா ஊங்கே” (புறம் பா 88)

பகைவரே நீவிர் எத்தகைய வன்மையுடையவராக இருக்கலாம். எம் தலைவன் உயர;ந்த வலிமையையும் ஒளியுடன் விளங்கிய நெடிய வேலையும் உடையவன் இளையோர;க்குத் தலைவனான அதியமான். களவேள்வி முதலான விழாவில் சிறந்த நல்ல போரைச் செய்து முழவு போன்ற தோளையும் உடையவன் எம் தலைவர் என்று அதியமானின் வீரத்தை பறைசாற்றுகிறது இப்பாடல்.

“இழை அணிப் பொலிந்த ஏந்துகோட்டு அல்குல்
மடவரல் உண்கண் வாள்நுதல் விறலி
பொருநரும் ஊரோ நும் அகன்தலை நாட்டு? என
வினவல் ஆனாப் பொருபடை வேந்தே!
எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
சிறுவன் மள்ளரும் ஊரே அதா அன்று
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை

வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும் என்ஐயும் உளனே” (புறம் பா 89)

அணியால் பொலிவு பெற்ற மைதீட்டிய கண்ணினையம் ஒளியுடைய நெற்றியையும் உடைய விறலியே! எதிரிநாட்டு மன்னனாகிய நீ போர் செய்யக் கருதினால் அடிக்கும் கோலினுக்கு அஞ்சாது சீறும் பாம்பைப் போல் இளைய, வீரரும் எம்நாட்டில் உள்ளனர். அதுமட்டுமின்றி பொது மன்றத்தில் தொங்குகின்ற இழுத்துக் கட்டப்பட்ட முழவினிடத்துக் காற்று மோதிக் கண்ணிடத்து தெளிந்த ஓசையை எழுப்புதலைக் கேட்ட அளவில் அது போர்ப் பறை முழக்கம் என்று மகிழும் என் தலைவனும் உள்ளான் என்று அதியமானையும் அவனது படைவீரர்களையும் சிறப்பித்துக் கூறும் பாடல் இது.

**முடிவுரை**

சங்க இலக்கிய எட்டுத்தொகை புறநூல்களில் ஒன்றான புறநானூறு வரலாற்று சின்னங்களையும் பதிவுகளையும் அறிய இந்நூல் சிறப்புமிக்க பெட்டகமாகவும் விளங்குகிறது.

புறநானூறு தமிழக மன்னர்களின் காலத்தையும் நாட்டின் மீதுகொண்ட பற்றையும் மக்களுக்கு நல்லாட்சி செய்யும் விதத்தையும் அவர்கள் வாழ்க்கையின் மூலம் வாழ்ந்து காட்டியுள்ளனர்.

சங்க கால மன்னர்களின் வீரம் கொடை அருள் பண்பு போன்ற எண்ணற்ற செய்திகளையும் இதன் மூலம் நாம் அறியலாம்.

புறநானூற்றின் மூலம் முதன் முதலில் பெண் தூதுசென்று போரை நிறுத்திய செய்தி பற்றி அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புக்கள்**

1. முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை 600098.
2. புலியூர்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், ஏழாம் பதிப்பு-2019.
3. கு.வெ.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் புறப்பொருள், உமா பதிப்பகம்.
4. கு.வெ. பாலசுப்பிரமணியன், புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்.
5. முனைவர் தமிழண்ணல், சங்க மரபு, பாரி நிலையம்.